பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ., எம். பி.

மலர்: 15] சென்னை: ஆவணி 6உ (22—8—67) செவ்வாய் ★ வெளியூர்: ஆவணி 7உ (23—8—67) புதன் [இதழ்: 58

## மற்றப் பகுதிகளுக்கும்!

மதுரை, ஆக. 20—

"ரூபாய்க்குப் படி அரிசி வழங்கும் திட்டம், குடும்பக் கார்டு உள்ள மற்ற பகுதிகளிலும் இரு கட்டங்களாகப் பிரித்துச் செயல் படுத்தப்படும்.

"கொள்முதல் பற்றிய கொள்கையில் இப்போது மாறுதல் இருக்காது; கொள்முதல் விலைகளை மாற்றும் எண்ணமும் அரசுக்கு இல்லை. அவ்வப்போது உற்பத்தியாளர்களைக் கலந்து ஆய்வு செய்தே கொள்முதல் விலை நிர்ணயிக்கப்படுகிறது"

--- அறிஞர் அண்ணா

# மேலவை உறுப்பினராக அறிவழகன்

## தி. மு. கழக ஆதரவுடன் மகத்தான வெற்றி

### காங்கிரசு ஆதரவு வேட்பாளர் படுதோல்வி

சென்னை, ஆக. 22—

தமிழகச் சட்டமன்ற மேலவைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆதரவுடன் போட்டியிட்ட தோழர் க. அறிவழகன் பெருவாரியான வாக்குகள் (1575) பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

சென்னை—செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதியில் தோழர் க. அறிவழகன் போட்டியிட்டார்.

காங்கிரசுக் கட்சியின் பேராதரவுடன் இதே தொகுதியில் போட்டியிட்ட புலவர் புகழேந்தி என்பவர், 134 வாக்குகளை பெற்றுப் படுதோல்வி அடைந்தார்.

மற்றும் இத்தொகுதியில் போட்டியிட்ட திரு. பார்த்தசாரதி 648 வாக்குகளும், பாலசுப்பிரமணிம் 123 வாக்குகளும், பிரசன்ன மாதவன் 107 வாக்குகளும், வரதராசலு 100 வாக்குகளும் பெற்றனர்.

ஏற்கனவே சட்டமன்ற மேலவையில் தி. மு. கழகத்தின் எண்ணிக்கை ஆறாக இருந்தது; இப்போது ஏழாக உயர்ந்துள்ளது.

பேராசிரியர் க. அன்பழகன் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதால் மேலவையில் காலியான இடத்திற்கு இத்தேர்தல் நடைபெற்றது.

பேராசிரியர் க. அன்பழகனின் இளவலான க. அறிவழகன் அந்த இடத்திற்கு இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

வண்ணை சர். தியாகராயர் கல்லூரியில் பொருளாதாரத் துறைப் பேராசிரியராகப் பணியாற்றிய வரும் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கச் செயலாளரும், பல்கலைக் கழக அகாடமிக் கவுன்சில் உறுப்பினராக இருந்தவருமான தோழர் க. அறிவழகன் ஆசிரியர்கள் நலனுக்காக மேலும் உழைக்க இப்போது நல்வாய்ப்புக் கிட்டியுள்ளது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று எம்.ஏ. பட்டம் பெற்றவரும், சிறந்த பேச்சாளரும் எழுத்தாளரும் ஆவார் திரு. அறிவழகன்.

# சேலம்--தூத்துக்குடித் திட்டங்கட்கு முட்டுக்கட்டையிட்டால்..

நெல்லை, ஆக. 21--

"தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் நெல்லை, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்கள் வளர்ச்சியடையும்; வேலையில்லாத் திண்டாட்டம் போகும்!

"தூத்துக்குடித் துறைமுகம்— அதையடுத்து சேதுக் கால்வாய்த் திட்டம் ஆகியவை நிறைவேற்றப்படுமானால், தென் பாண்டிய நாடு வளம் பெறும்! தூத்துக்குடி இன்றும் மீன் பிடி துறைமுகமாக இருக்கிறது—ஆழ் கடல் துறைமுகமாக இல்லை. தமிழக அரசு இனியும் சகித்துக் கொண்டிருக்காது! எழுச்சி நாள் தரவேண்டிய பலனை கொடுத்திருக்கிறது! மத்திய அரசு அதிகாரிகள் சென்னைக்கு சந்திக்க வருகிறார்கள்!

"சேலம் இரும்பு ஆலை 1967-ல் வரும் என்றார்கள்—வரவில்லை! நம் ஆட்சிக் காலத்தில் சேலம் -- தூத்துக்குடித் திட்டங்களை நிறைவேற்றியே தீருவோம்! மத்திய அரசு குறுக்கே நின்றாலோ, தடுத்தாலோ, தமிழக அரசு நிச்சயம் எதிர்க்கும்!

"எதற்கெடுத்தாலும் டெல்லியைக் கேட்கிறார்களே--என்று சொல்லுகிறார்கள. டெல்லியைக் கேட்காமல் வேறு யாரைக் கேட்பது? தன வீட்டுக் கதவை தட்டுவானே தவிர, எதிர் வீட்டுக் கதவையா தட்டுவான்"

--அறிஞர் அண்ணா

(புளியங்குடி பொதுக்கூட்டத்தில்)

# நெருப்பிலே மலர்ந்த ஆட்சி!

★

கடலூர், ஆக. 20—

"சனநாயக அமைப்பில் எந்தக் கட்சியும் ஆட்சிபீடத்தை ஏற்கலாம்; ஆனால், அரசியல் நிர்வாகம் மாறாது!

"தற்போது பதவி ஏற்றுள்ள தி.மு.க. அரசு, மிக நெருக்கடியான நிலையில் நீரிலே மலராமல் நெருப்பிலே மலர்ந்துள்ளது!

"ஆகவே, அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை மெல்லமெல்லச் சீர்தூக்கிப் பார்த்து, நடுநிலை நழுவாது நிதி நிலைமைகளை அனுசரித்து ஆவன செய்யும்; இந்நிலையில் இவ்வூழியர்கள் தங்கள் கோரிக்கைகளை ஒத்திப்போட்டு, அரசினருடன் ஒத்துழைத்து உதவக் கேட்டுக் கொள்கிறேன்"

என்று, இங்கு நடந்த தமிழ்நாடு கருவூலக் கணக்குத் துறை அலுவலர் ஒன்றிப்பு மாநாட்டில் பேசுகையில் அமைச்சர் மு. கருணாநிதி கூறினார்.

# சேலம் -- தூத்துக்குடி முடிவு என்ன?

## திட்டவட்டமாகத் தெரிவிக்கத் தயங்குகிறது டில்லி

### உருக்கு அமைச்சரிடம் நேரில் கேட்கவிருப்பதாக அறிஞர் அண்ணா அறிவிப்பு

மதுரை, ஆக. 21—

"மத்திய அரசிடம் உள்ள தொல்லை இதுதான்; இப்போதுகூட, 'சேலம் திட்டம் வேண்டாம்' என்று மத்திய அரசு வாய் திறந்து கூறவில்லை; 'நாங்கள் பரிசீலனை செய்து வருகிறோம்' என்றுதான் அவ்வப்போது மத்திய அரசு கூறிவருகிறது; 'உண்டு அல்லது இல்லை' என்று அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டால், அடுத்தபடியாக என்ன செய்யலாம் என்பது தெளிவாகத் தெரியும்; திட்டவட்டமான பதிலைத் தெரிவிக்காமல் அவர்கள் இந்தப் பிரச்சினையை 'திரிசங்கு' நிலையில் எப்போதும் வைத்திருக்கின்றனர்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், செய்தியாளர்களிடம் பேசுகையில் விளக்கியுள்ளார்கள்.

மத்திய அரசின் உருக்கு அமைச்சர் சென்னா ரெட்டியைச் சந்திக்கப்போவதால் இது தொடர்பான மத்திய அரசின் பதில் தெளிவாகத் தெரியலாம் என்று நம்புகிறேன் என்றும் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்.

"சேலம் உருக்காலை, தூத்துக்குடித் துறைமுகம் முதலிய திட்டங்களைச் செயல்படுத்துவதில் மத்திய அரசு பரிவுடன் நடந்துகொள்ளும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன" என்றும் அவர் கூறினார்.

# ஆங்கிலத்தைக் கைவிடுவதால் ஏற்படும் இடர்ப்பாடு

### வடமாநில கல்வியமைச்சர்கள் உணருகின்றனர்

புதுடில்லி, ஆக. 21—

பல்கலைக் கழகக் கல்விக்கு ஆங்கிலத்திற்குப் பதில் வட்டார மொழியை பயிற்சி மொழியாக ஆக்குவதில் உள்ள இடர்ப்பாடுகளை பல்வேறு மாநிலங்களையும் சேர்ந்த கல்வியமைச்சர்கள் விளக்கினர்.

மாநிலக் கல்வியமைச்சர்கள் இங்கு மத்திய கல்வியமைச்சர் டாக்டர் திரிகுணசென் தலைமையில் கூடி, தேசியக் கல்விக் கொள்கை பற்றிய நாடாளுமன்றக் குழுவின் அறிக்கையை விவாதித்தனர்.

தமிழகக் கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தமது கருத்தை அறிவிக்கையில், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், வட்டார மொழியைப் பயிற்சி மொழியாக்குவதில் எவ்விதக் கருத்து வேற்றுமையும் இல்லை என்றும், மாநிலத்தில் கல்வியாளர்களும் இதற்கு ஆதரவாக இருக்கின்றனர் என்றும், ஆனால், 5 ஆண்டு—10 ஆண்டு என்று காலவரை செய்வது கூடாது என்றும், பயிற்சி மொழி மாற்றத்துக்குச் சிறிது காலம் பிடிக்கும் என்றும் கூறினர்.

அசாம், நாகாலாந்து, மணிப்பூர் ஆகிய மாநிலங்களின் கல்வியமைச்சர்கள், பயிற்சி மொழி மாற்றத்தினால் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளை எடுத்துக்கூறினர்.

# ஆட்சி மொழித் திருத்த மசோதா நிலை

### சட்ட அமைச்சுத் துறைக்கே இன்னும் செல்லவில்லையாம்

புதுடில்லி, ஆக. 21—

"மத்திய அரசு உருவாக்கியுள்ள ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதா இன்னும் சட்ட அமைச்சுத் துறையின் ஆய்வுக்கு அனுப்பிவைக்கப் படவில்லை"

என்று சட்ட அமைச்சர் திரு. கோவிந்த மேனன், செய்தியாளர் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

எந்த மசோதாவானாலும் அதன் தொடர்பான கொள்கைகளுக்கோ அதில் அடங்கியுள்ள கருத்துக்களுக்கோ தமது அமைச்சுத் துறை பொறுப்பில்லை என்றும், அரசியல் சட்டத்துக்கு உட்பட்ட வகையில் சட்டச் சிக்கல் ஏதும் இல்லாமல் இருக்கிறதா என்பதையே தமது அமைச்சுத் துறை பார்த்துக் கொள்ளும் என்றும் அவர் மேலும் கூறினர்.

# பாதுகாப்பு அமைச்சுத் துறையின் இந்திவெறி!

புதுடில்லி, ஆக. 21—

ஆங்கிலத்திலிருந்து இந்திக்கு மாறுவதில் மற்ற அமைச்சுத் துறைகளையெல்லாம் முந்திக் கொண்டு செயல்படுகிறது இந்தியப் பாதுகாப்புத் துறை!

இவ்வாண்டுக்கான பாதுகாப்பு அமைச்சுத் துறையின் நுழைவு அனுமதி அட்டையில் உள்ள எல்லாம் இந்தியிலேயே அச்சிடப்பட்டுள்ளன.

அந்த அட்டை, 'பாதுகாப்புத் துறையால் அளிக்கப்பட்டது' என்பதைத் தெரிவிக்கும் (ரப்பர் ஸ்டாம்பு) முத்திரை மட்டுமே ஆங்கிலத்தில் இருக்கிறது!

பாதுகாப்புத்துறை தவிர மத்திய அரசுச் செயலகத்தின் மற்ற எல்லாத் துறைகளுக்குமான நுழைவு அட்டை—அடையாள அட்டை ஆகியவற்றை உள் துறை அமைச்சகம் ஆங்கிலத்திலேயே அச்சிட்டுள்ளது.

# இந்தி வெறியர்கட்கு வரலாற்றின் எச்சரிக்கை!

"ஆஸ்டிரே—அங்கேரியப் பேரரசில் பெரும்பான்மையினராக இருந்த ஜெர்மானியர், ஜெர்மன் மொழி பேசாத மக்கள்மீது தங்கள் மொழியைத் திணிக்க முயன்றனர்.

"ஜெர்மன் மொழி பேசி வந்த ஆஸ்டிரியர்கள், தங்கள் மொழி, ஜெர்மன் பேரரசில் ஆதிக்க மொழியாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தி வந்ததால்தான் அந்தப் பேரரசு சிதறுண்டு போனது என்பது மட்டுமல்ல—முதல் உலகப் போருக்குப் பின்னர், 'செக்கோஸ்லோவேகியா' என்றும், 'அங்கேரி' என்றும் இரண்டு புதிய சுதந்தரக் குடியரசுகள் தோன்றவும் அதுதான் காரணமாக ஆயிற்று!"

—'டெக்கான் ஹெரால்டு' (16—8—67)

# அண்ணா ஆட்சி நீடிக்கட்டும்!

## குடியரசுத் துணைத் தலைவர் வி. வி. கிரி வாழ்த்து

### 'ஒப்படைக்கப்பட்டுள்ள ஒளி விளக்கு அணையாமல் காப்போம்'-- அண்ணா உறுதிமொழி

சென்னை, ஆக. 21—

'இந்த மாநில முதலமைச்சர் (அண்ணா) மதுவிலக்குக் கொள்கையில் மிகவும் உறுதியாய் இருப்பது கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

"மதுவிலக்குக் கொள்கையைக் கடைபிடிப்பதனால்—ஏழெட்டு கோடி ரூபாய்க்கு மேல் வரி வருமானம் போய்விடுகிறது என்றாலும்—உறுதியுடன் அதனைக் கடைபிடிக்கும் கொள்கையைப் பாராட்டுகிறேன்.

"'மதுவிலக்கினால் பொதுமக்களுக்கு நன்மை உண்டு' என்று தெரிந்த காரணத்தால்தான் மாநில முதலமைச்சர் மதுவிலக்குக் கொள்கையில் உறுதியாக இருக்கிறார்.

"பிற மாநிலங்கள் மதுவிலக்குத் திட்டத்தை விட்டுவிட்டு ஓடும்போதுகூட, மதுவிலக்கில் உறுதியாக இருக்கும் அண்ணா அவர்களுக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவிக்கிறேன்"

என்று இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் வி.வி. கிரி அவர்கள் தெரிவித்தார்.

19—8—67-ல், பச்சையப்பன் கல்லூரியில், நீதிபதி டபிள்யூ. எஸ். கிருஷ்ணசாமி நாயுடுவின் உருவப் படத்தை, திரு. வி. வி. கிரி அவர்கள் திறந்துவைத்துப் பேசியதாவது :—

"நான் சென்னையை — தமிழகத்தை மிகவும் விரும்புகிறேன்; காரணம், அதனுடைய எளிமை—திறமை!

அரசியலில் மிகவும் சிக்கலான காலத்தில் இருக்கிறோம். கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், நாட்டுக்குத் தேவையானவற்றை நிறைவேற்றுவதில் ஒத்துப்போகும் மனப்பாங்கு ஏற்பட வேண்டும்.

மத்திய அரசாங்கமானாலும்—மாநில அரசாங்கமானாலும், அவ்விதம் செயல்படுவதைத்தான் மக்கள் வரவேற்பார்கள். அதனால்தான் மக்களுக்கு நன்மை பயக்கும்.

மக்களுக்கு நன்மை செய்வது எந்தக் கட்சி அரசாங்கமாக இருந்தாலும்—அது காங்கிரசு அரசாங்கமாக இருந்தாலும், காங்கிரசு அல்லாத அரசாங்கமாக இருந்தாலும்—நீடித்து இருக்க வேண்டும்.

மக்களுக்கு நன்மை செய்யும் அரசாங்கமாக அவரது (அண்ணா) அரசாங்கம் நீடித்திருக்க வாழ்த்துகிறேன்."

### அண்ணா உறுதி

இறுதியாக முதலமைச்சர் அண்ணா அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது :—

"குடியரசுத் துணைத் தலைவர் வி. வி. கிரி அவர்கள் நமக்கு நல்ல அறிவுரை வழங்கினார்கள். அந்த அறிவுரையை பொன்னே போல் போற்றுவோம்.

'அரசியலில் கருத்து மாறுபாடுகள் இருந்தாலும், ஒத்துப்போகும் தன்மை வளரவேண்டும்'—இது, திரு. கிரி அவர்களின் அறிவுரை.

இந்த அறிவுரை, ஏதோ ஒரு குறிப்பிட்ட கூட்டத்திற்கு மட்டும் கூறப்படும் அறிவுரையல்ல; இந்த நாட்டுக்கே கூறப்பட்ட அறிவுரையாகும்.

சனநாயகப் பக்குவம் பெற்ற நாடுகளில் இருக்கும் கட்சிகளில் அதிகமான சித்தாந்த வேறுபாட்டைக் காண முடியாது; சித்தாந்தத்தைச் செயல்படுத்துவதில்தான் வேறுபாட்டைக் காண முடியும்.

அமெரிக்காவிலுள்ள சனநாயகக் கட்சிக்கும்—குடியரசுக் கட்சிக்கும் மிகப் பெரிய சித்தாந்த வேறுபாட்டைக் காண முடியாது. வியட்நாம் பிரச்சினையில் கருத்து வேறுபாடு அந்தக் கட்சிகளுக்குள் இருக்கலாம்; ஆனால் அந்தப் பிரச்சினையை எப்படி நடைமுறையில் அணுகுவது என்பதில்தான் வேறுபாடு இருக்க முடியும்.

அத்தகைய பக்குவமான நிலையை நாமும் அடைய முயற்சி செய்ய வேண்டும்.

**கிரி அவர்களுக்கு உறுதி கூறிக் கொள்வேன்—எங்களிடம் தரப்பட்ட ஒளிவிடும் தீபத்தை அணையாமல் காப்போம்! மக்களுக்கு நன்மையே செய்வோம்; நாட்டு ஒற்றுமையைக் காப்போம்!"**

அண்ணா உரைக்குப்பின், பச்சையப்பன் அறங்காவலர் குழு உறுப்பினர் திரு. வி. குழந்தைவேலு நன்றி கூறினார்.

# இந்திரா--சவாண் பதவிப் போட்டி!

### மத்திய அமைச்சரவை மாறலாம்

உள்துறை அமைச்சர் சவாணுக்கும்—தலைமை அமைச்சர் இந்திராவுக்கும் இடையே பிளவு வலுத்து வருவதாகத் தெரிகிறது!

இஸ்ரேல்—அரபு நாடுகளின் போரின்போது சவாண், இந்திரா காந்தியுடன் மோதிக் கொண்டது பலரும் அறிந்த ஒன்று!

சவாண், தாமே தலைமையமைச்சராக வர விரும்புவதாகச் சொல்லப்படுகிறது.

அண்மையில் 114 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுத் தலைமையமைச்சரிடம் தந்த விண்ணப்பத்திற்கு சவாணின் மறைமுக ஆதரவு உண்டாம்!

'அமைச்சரவையைத் தலைமையமைச்சர் மாற்றியமைக்கக் கூடும்' என்றும் ஒரு பேச்சு அடிபடுகிறது! அப்பொழுதும் சவாண், நீக்கப்படமாட்டார்! அவருடைய அமைச்சரவை இரண்டாக்கப்பட்டு, துப்பறியும் துறையும், மாநில உறவுக்கான துறையும் இந்திரா காந்தியின் பார்வையின் கீழ்கொண்டு வரப்படலாம்!

இத்தகவல் 'டெக்கான் ஹெரால்டு' 18—8—67 இதழில் வெளியாகியுள்ளது.

### மின்னொளி பெற்ற ஊர்கள்!

சூலை முதல் நாளன்று தமிழகத்தில் மின் வசதி பெற்ற நகரங்கள். சிற்றூர்கள் முதலியவற்றின் மொத்த எண்ணிக்கை 25,823; மின் இணைப்புப் பெற்ற பம்பு செட்டுகளின் மொத்த எண்ணிக்கை 3,00,078 ஆகும்.

# இருபதாண்டு உருண்டோடிவிட்டது--

## 'உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் அற்ற நாடு உருவாகியதா?'--இதயத்திலிருந்து எழும் கேள்வி இது!

### 'இருக்கின்றோம்' என்பதைத் தவிர 'வாழ்கின்றோம்' எனக் கூறிக்கொள்ளும் உரிமை நமக்கு இல்லை!

### கொடி பறக்கிறது கோலாகலமாக--கூடவே நாட்டைப் பாழ்படுத்தும் கொடுமைகள் நெளிகின்றன!

அடிமைத் தளைகளை அகற்றி—அந்நிய அரசு அகற்றி—ஆதிக்கத்தினை அகற்றி, 'நம்மை நாமே ஆண்டுகொள்ளும் உரிமை பெற்றிட—எவரெவர் என்னென்ன முறையில் தொண்டாற்றினர்—எத்தகைய இன்னல்களையும் இழப்புகளையும் ஏற்றனர்—இன்னுயிர் ஈந்தனர் என்பது பற்றிய நினைவுகள் நெஞ்சத்தில் நிரம்பி 'அம்மாவீரர்கட்கு வீரவணக்கம் செலுத்திட வேண்டும்' என்ற உணர்ச்சியைத் தருவதுடன் 'அத்தகைய வீரர்கள் வழிவழி வந்தோர் நாம்' என்ற எழுச்சிமிக்க உணர்வைக் கொடுத்திடும் நாள்—ஆகஸ்டு பதினைந்து!

இந்நாள்—நமக்கெல்லாம் அந்நாள் நிகழ்ச்சிகளை நினைவிலே கொண்டுவந்து பாடம் கற்பித்திடும் நாளாகும்!

'இந்நாள் வந்திடின், நாடு என்னென்ன வண்ணம் பெற்றிடும்—ஏற்றம் பெற்றிடும்' என்றெல்லாம் விடுதலை வீரர்கள் அன்று எண்ணினர் என்பதனை, இன்று நாம் எண்ணிப் பார்த்திடல் வேண்டும்.

வந்தது சுதந்தரம்! வாழ்கின்றோம்—'நம்மை நாமே ஆள்கின்றோம்' என்ற உரிமையுடன்! ஆனால் வாழ்கின்றோமா ?—நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி இது—'வாழ்கின்றோமா?'

'வாழ்கின்றோம்' என்பதற்கும்—'இருக்கின்றோம்' என்பதற்கும், பொருள் வேறுபாடு மிகுதி! நம்மிலே மிகப் பெரும்பாலோர் இன்று, 'ஏதோ இருக்கின்றோம்' என்று கூறிடும் நிலையிலே உள்ளோம்—'வாழ்கின்றோம்' என்று மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ளும் நிலையில் அல்ல!

பட்டொளி வீசிப் பறந்திடும் சுதந்திரக் கொடியினைக் காணுகின்றோம்—இன்னிசை கேட்கின்றோம்—அணிவகுப்புகள் நடாத்துகின்றோம்--அவனிக்கு அறிவிக்கின்றோம்—'இது எமது சுதந்தர நாள்' என்று! ஆனால், 'வாழ்கின்றோமா?'--வாழ்வு நல் வாழ்வாக--புது வாழ்வாக--முழு வாழ்வாக மலர்ந்திருக்கிறதா?

ஏழ்மையும் அறியாமையும் ஒழிந்த நிலையே 'வாழ்கின்றோம்' என்று கூறிட நாம் உரிமை பெறும் நாளாகும்!

இல்லாமையும் போதாமையும் ஒழிந்த நாளே---நாம் வாழ்வு பெற்றிடும் புது நாளாகும்!

பேதமும் பிளவும் நீங்கி, 'எல்லோரும் ஒன்று' என்ற நிலை பிறந்திடும் நாளே—வாழ்விலோர் திருநாள்!

பிறரைத் தாழ்த்தாமல்--பிறர் தாள் விழாமல்--சுரண்டாமல்--சுரண்டப்படாமல்--உழைத்து உழைப்பின் பயனைப் பெற்றுப் புன்னகை பூத்திடும் முகத்தினராகிடும் நாளே--'நாம் வாழ்கின்றோம்' என்று கூறிடும் நிலையினை நமக்கு அளித்திட முடியும்!

இந்நிலையை நாம் அடையும் வரையில், 'இருக்கின்றோம்' என்று மட்டுமே கூறிக்கொள்ள முடியும்! 'வாழ்கின்றோம்' என்று கூறிக்கொள்ளும் உரிமை நமக்கு இல்லை!

விடுதலை மெற்ற நாடுகள், வாழ்வது மட்டுமல்ல--பிற நாடுகளை வாழ வைக்கும் வல்லமையும் வசதியும் பெற்றுள்ளன--காண்கின்றோம்!

நாம்--வாழ்வின் இலக்கணத்தை நாடி நடைபோடுகின்றோம்!

சுதந்தரம் பெருத நாட்களில், நாம், ஏழ்மையிலும் அறியாமையிலும் சிக்கிக் கிடந்தோம்; எனினும், உலகின் பண்பாளர் நம்மைக் கேவலமாகக் கருதவில்லை--பரிவு காட்டினர்--'பாவம்; வளம் நிறைந்த நாடுதான்; பொன் விளையும் பூமிதான்; என்றாலும், என்ன செய்ய இயலும்? ஆங்கில ஆதிக்கம் அந்நாட்டு மக்களை அவதிக்குத் தள்ளிவிட்டது' என்று பேசினர்! 'விடுதலை பெறவேண்டும்' என வாழ்த்தினர்--நல்லெண்ணத்தை வழங்கினர்!

ஆனால், விடுதலை பெற்ற பிறகும், ஏழ்மையும் அறியாமையும், பேதமும் பிளவும் நீடித்து இருந்திடக் காணும்போது, என்ன எண்ணுவர்—என்ன கூறுவர்—யாரைக் காரணமாகக் காட்டுவர், இந்நிலைமைக்கு?

நம்மை நாமே அல்லவா ஆண்டுக் கொண்டிருக்கிறோம்? நம்முடைய வாழ்வுக்கும் தாழ்வுக்கும் நாமே அல்லவா பொறுப்பாளிகளாகிவிட்டோம்?

ஆகஸ்டு பதினைந்து எனும் விடுதலைத் திருநாள்—மகிழ்ச்சி, எழுச்சி, வீர உணர்ச்சி ஆகியவைகளைத் துவக்கத்தில் தந்திட உதவிற்று!

ஆண்டு இருபதைக் கடந்துவிட்டோம்! இன்றைய ஆகஸ்டு பதினைந்து, நமக்கு பொறுப்புணர்ச்சிகளைத் தந்திடும் நாளாகிறது!

'சுயராஜ்யம் பெற்றிடுவோம்; சுயராஜ்யம் அமைத்திடுவோம்' என்று சூள் உரைத்தோமே—அதற்கான முயற்சியிலே முனைந்து நிற்கிறோமா? 'யாது செய்திடின் அந்த இலட்சியத்தை அடைய முடியும்?' என்பது பற்றி எண்ணிச் செயலாற்றிடும் பொறுப்புணர்ச்சியைத் தந்திடும் நாள்—இன்றைய ஆகஸ்டு பதினைந்து!

**ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துரைத்தார் வள்ளுவப் பெருந்தகை—'உறுபசியும், ஓவாப் பிணியும் செறுபகையும் அற்றது நாடு என்று! இருபதாண்டுகள் உருண்டோடி விட்டன! ஆண்டுக்கு ஆண்டு விழா நடத்துகின்றோம்! விருத்தம் பாடுகின்றோம்! ஆனால், வள்ளுவர் தந்த 'நாடு' காண்பதில் வெற்றி பெற்றோமா?'—இது, இன்றுள்ள கேள்வி!**

'விழா, மகிழ்ச்சியைக் கெடுத்துவிடுமோ' என்று அஞ்சி, இந்தக் கேள்வியினை எழுப்பாமல் விட்டுவிடுவது மிக மிகத் தவறு!

ஆயாசப்படவோ, சலிப்படையவோ, மனம் உடையவோ அல்ல—'இந்தக் கேள்வியை எழுப்ப வேண்டும்' என்று நான் கூறுவது! மேலும் செம்மையாகச் செயலாற்றும் உணர்வு பெற—இந்தக் கேள்வி தேவை!

இந்தக் கேள்வி, அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டது! இது நாட்டு மக்கள் இதயத்திலிருந்து எழுந்திடும் கேள்வியாகும்!

இயற்கை கொஞ்சுகிறது, ஆனால், இல்லாமை கொட்டுகிறது—மறுப்பதற்கில்லை! வளம் பெருகுகிறது; ஆனால், சிறு சிறு வளைக்குள்ளே புகுந்துகொண்டுவிடுகிறது—மறைப்பதற்கில்லை!

மக்கள் தொகை பெருகுகிறது; ஆனால், நலிவு நெளிகிறது—ஒப்புக்கொண்டாக வேண்டும்!

பற்றுக்குறை மிரட்டுகிறது! அகவிலை அலைக்கழிக்கிறது! கள்ள வாணிபம்—கொள்ளை இலாபம்—குறுக்கு வழிகள்—கலப்படம்—இவைபோன்ற கேடுகள் நாட்டைப் பாழ்படுத்துகின்றன!

கோடி பறக்கிறது கோலாகலமாக—கூடவே இக்கொடுமைகள் நெளிகின்றன—'அடக்குவார் யார்?' என்று கேட்டபடி!

'பாலைவனம் சோலைவனம் ஆக வேண்டும்; அங்கு பசுங்கிளிகள் பாடிடவும் வேண்டும்'—இது, வெறும் கவிதையாகவே என்றென்றும் இருந்திடக் கூறப்பட்டது அல்ல! 'செயல்படுத்திக் காட்டிட முடியும்' என்ற உறுதியை நாம் அனைவரும் பெற்றிடத் தரப்பட்டதே—இதுபோன்ற கவிதைகள்! இந்நாளில் அந்த உறுதியினை நாம் பெற்றிட வேண்டும்!

'சுதந்தரம் பெற்றோம்—அதைக் காத்திடும் வல்லமையும் பெற்றோம்' என்று கூறிக் களித்திடுவதுடன் நில்லாது, 'சுதந்தரம் பெற்றோம்—சுக வாழ்வு பெற்றோம்' என்று கூறிப் பெருமிதம் கொண்டிடத்தக்க இலட்சியத்தை நோக்கி நடந்திட வேண்டும்—உறுதியுடன்-உற்சாகத்துடன்-நம்பிக்கையுடன்!

மிகப் பெரிய ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற்றிட முடிந்தது—அதற்கான ஆற்றல் நம்மிடம் இருந்திருக்கிறது! 'அதே ஆற்றல், இந்நாட்டிலுள்ள ஏழ்மையையும் அறியாமையையும், பேதத்தையும் பிளவையும் போக்கிடப் பயன்படவேண்டும்' என்ற உணர்ச்சியையும் பெறவேண்டும்!

கொடி ஏற்றுபவர்—கோலாகல விழா நடத்துபவர்—விடுதலை வீரர்களைக் கொண்டாடுபவர்—இவர்கள் மட்டும் போதுமா-அந்த இலட்சியம் நிறைவேற?

உச்சிப்போது வந்தது கண்டும் சளைக்காமல்

(4-ம் பக்கம் பார்க்க)

# பழம்பெருமை பேசுவதோடு புதிய சாதனைகளையும் புரிவோம்!

## இல்லாமை--கல்லாமை போக்கி 'எல்லார்க்கும் எல்லாம்' ஆக்குவோம்!

### 'இன்பம் தவழும் சிறந்த உலகைப் படைக்கவல்லது குறள்நெறி'-- வானொலியில் அமைச்சர் முத்துச்சாமியின் சிறப்புரை

"உத்திரமேரூர் கல்வெட்டுக்களிலும், தமிழ் இலக்கியச் சான்றுகளிலும் பொதிந்துள்ள செய்திகளை அறியும்போது, அயல் நாட்டார் பெரிதும் வியந்து மகிழ்கின்றனர்.

"நாம் பழம்பெருமை பேசுவதோடு நின்றுவிடாமல், புதிய சாதனைகளை உருவாக்க வேண்டும். இதற்கு வழிகாட்டுவதே குறள்நெறி.

"நாட்டில்—சமுதாயத்தில் காணப்படும் இல்லாமை, கல்லாமை போன்றவைகளைப் போக்கி, 'எல்லார்க்கும் எல்லாம்' என்கின்ற நிலை பெற்ற இன்பம் 'தத்தித் தவழும் புதியதோர் சமுதாயம் காணப் புறப்படுவோம், வாரீர்"

என்று நாட்டு மக்களுக்கு மாண்புமிகு அமைச்சர் திரு. மா. முத்துசாமி அன்பழைப்பு விடுத்திருக்கிறார். 9—8—67 அன்று வானொலியின் கிராம நிகழ்ச்சியில் ஒலிபரப்பான அமைச்சரின் சிறப்புரை வருமாறு:—

ஒவ்வொரு கிராம வானொலி மன்றத்திலும் 20 உறுப்பினர் உள்ளனர் என்றும், தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களிலேயேயும் சேர்ந்து சுமார் 1,020 கிராம வானொலி மன்றங்கள் இப்போது இயங்கி வருவதாகவும் அறிகிறேன்.

'செய்வன திருந்தச் செய்' என்னும் முதுமொழிக்கேற்ப, கிராம வானொலி மன்றங்கள், மக்களுக்கு மேலும் பயனுள்ள முறையில் பணியாற்றுவதற்கு, கிராம வளர்ச்சித் துறையினரும், வேளாண்மைத் துறையினரும், வானொலி நிலையத்தினரும், கூட்டு முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாகக் கிராம வளர்ச்சித் துறையினர், தமிழகமெங்கும் உள்ள சுமார் 13 ஆயிரம் ஊராட்சிகளில் அமைந்துள்ள சுமார் 15,000 வானொலிப் பெட்டிகள் திறமையுடன் இயக்கத்தக்க நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

தமிழ் மொழி—நமது மக்கள் வாழ்வில் ஒன்றிவிட்ட உயிர் மூச்சு; எனவே, தமிழ் மொழியின் வளம் பல்வேறு துறைகளிலிருந்தும் ஒன்று திரண்டு—உரம் பெற்று வளரவேண்டும்.

இலக்கிய நயத்திலும், இலக்கண மாட்சியிலும் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பண்பட்டு விளங்கும் நமது தமிழ் மொழி, செல்வமும் செல்வாக்கும் பெற்றுச் சிறப்புற வேண்டும். அதற்கேற்ற வாய்ப்பும் வசதிகளும் எங்கும் பெருக வேண்டும்.

எளிய—இனிய தமிழால் கருத்துக்களை எடுத்துரைத்து, மக்களின் இதயம் கவர இவ்வானொலி மன்றங்கள் பாடுபட வேண்டும்.

இந்த அடிப்படையில், ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும், நகராட்சிகளும், நாட்டாட்சிக்கு ஏற்ற நல்ல அடித்தளங்களாக விளங்கிவருகின்றன. இவற்றில் காணப்படும் குறைபாடுகளை அகற்றிச் சீராக்கிச் செப்பனிட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் விருப்பமே தவிர, அவற்றை அழித்துவிடவேண்டும் அல்லது மாற்றிவிட வேண்டும் என்பதல்ல.

மொத்தத்தில், ஊராட்சி நிறுவனங்கள், வலிவுள்ள அமைப்புகளாகப் பணியாற்ற வேண்டும் என்று விரும்புகிறோம். இதற்கு அனைவரின் உளமார்ந்த ஒத்துழைப்பையும் பெற்று, சிறந்த முடிவு காண முயன்று வருகிறோம்.

'ஊராட்சி மன்றங்கள், கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் அமைப்புகள்' என்ற அந்த அளவோடு நின்று, காய்தல் -- உவத்தல் அகற்றி—கட்சி மாச்சரியங்களை மறந்து—'அனைவரும் ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர்கள்' என்னும் உணர்வோடு செயலாற்றுமானால், சிறப்பான பணியாற்ற முடியும். இம்முறையில் செயலாற்ற வேண்டுமென விழைகிறேன்—செயலாற்றுமென நம்புகிறேன்.

இத்துறையில் பணியாற்றும் அலுவலர்கள் அனைவரும், அரசுக்கும்—பொது மக்களுக்கும் இடையில் நற்றூதுவர்களாக நின்று, 'நமக்குக் கிடைத்துள்ள இப்பொறுப்பு, பொதுமக்களுக்குச் சேவை செய்வதற்குக் கிடைத்துள்ள அரியதொரு வாய்ப்பு' என்னும் தியாக உணர்வோடு அரசுடன் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சமுதாய நலத் திட்டத் துறையைப் பற்றிய பல்வேறு செலவு விவரங்களையெல்லாம் கணக்கில் கொண்டு பார்க்கும் அளவில் ஊழியர்களுக்குச் செலவு செய்யப்படுவது, மொத்தச் செலவில் பத்து சதவிகிதமாகும். இந்த உண்மையை உணராத பலர், பல்வேறு விதமாகப் பரவலாகப் பேசியும், எழுதியும்வருவது சரியல்ல! தமிழக அரசின் சார்பாக உள்ள கணக்கு விவரங்கள் வெளியிடும் இச்செய்தியை, அனைவரும் அறிய வேண்டியது அவசியம். இதைப் பற்றிய தவறான கருத்துக்களைப் போக்கக் கிராம வானொலி மன்றங்களும், பொறுப்பிலுள்ள மற்றவர்களும் முயலவேண்டும்.

குறள் நெறி, அனைவரும் போற்றற்குரியது! அந்த நெறி, இன்பம் தத்தித் தவழும் சிறந்த உலகைப் படைக்கவல்லது! ஊராட்சி—நகராட்சி நிறுவனங்கள், கிராம வானொலி மன்றங்கள்—மற்ற பல்வேறு பொதுப்பணி நிலையங்கள் ஆகிய அனைத்துக்கும் குறள் நெறி சிறந்த தூண்டுகோலாகவும், வலியூட்டும் ஊன்றுகோலாகவும் திகழ்வது திண்ணம்."

# திருப்பெரும்புதூர் பெறும் புதிய வளர்ச்சி

### மாதிரிக் கிராமத் திட்டத்தின்கீழ் வசதிகள்

சென்னை, ஆக. 21—

செங்கற்பட்டு மாவட்டத்தில் சுமார் 650 சதுர மைல் பரப்பில் வாழும் மக்களின் பொருளாதார வளத்தை உயர்த்துவதற்காக ஒரு மாதிரிக் கிராம வளர்ச்சித் திட்டமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதில் பெரும்புதூர் வளர்ச்சிக் திட்டத்தின்படி, மேலும் மூன்று உற்பத்தி மையங்களும், இரு பயிற்சி நிலையங்களும், விரைவில் செயல்படும் என்று தெரிகிறது.

குன்னத்தூரில் மின் லிங்க்-கிளிப் தயாரிப்புத் தொழிற்சாலை; மாப்பேட்டில் காலணித் தொழிற்சாலை; நாசரேத்துப்பேட்டையில் எண்ணெய் பிழியும் ஆலை—என்று மூன்று தொழிற்சாலைகள் அமையும்.

களிமண் பொம்மை செய்ய மாத்தூரிலும், பழைய காட்டுக் கூடை முடையத் திண்ணனூரிலும் பயிற்சி நிலையங்கள் அமையும்.

ஐந்தாண்டுகளுக்கு முன்னர் திருப்பெரும்புதூர் வளர்ச்சித்திட்ட வேலை மேற்கொள்ளப்பட்டதில் அப்பகுதியில் வாழும் ஆயிரக் கணக்கான கிராம மக்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்தன; அப்போது பனை நார்—பாய் முடைவது ஆகியவற்றில் பயிற்சியளிக்கவும், பொது வேலைகளுக்கான பொறியியல் தொழிற்சாலைகளும் செம்பரம்பாக்கத்தில் அமைக்கப்பட்டன.

இத்தொழிற்சாலைகளில் உழு கருவிகள் செய்யப்படுகின்றன; கால்நடை வளர்ப்பிற்கும் பயன்படும் கருவிகள் செய்யப்படுகின்றன; எஃகு இருக்கைகள் செய்வதற்குப் பயன்படும் எஃகுப் பொருட்கள் செய்யப்படுகின்றன.

இத்தாலூகா முழுவதிலும் பரவியிருக்கும் காகித உறை செய்யும் தொழிற்சாலைகளிலிருந்து, அரசுக்குத் தேவையான உறைகள் கிடைக்கின்றன.

## அண்ணா படத்திறப்பு

தாரமங்கலம், ஆக. 15—

தாரமங்கலம் ஆண்கள் உயர்நிலைப்பள்ளியில் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் உருவப்படத்தை ஆசிரியர் நடராசன் திறந்துவைத்தார்.

மாணவர் தலைவர் குப்புசாமி நன்றி கூறினார்.

## கலைக் குழு முகவரி

டி. எஸ். மணிவண்ணன் கலைக்குழு
28, திருவள்ளுவர் சாலை,
தேனாம்பேட்டை, சென்னை-18.

# தமிழகத்திற்குக் கூடுதலான உரம்

### அமைச்சர் ஏ. கோவிந்தசாமி தரும் தகவல்

உடுமலை, ஆக. 19—

"தமிழகத்தில் அதிக விளைச்சலைத் தரும் உணவுத் தானியச் சாகுபடியை அதிகரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பதைக் கருதி, தமிழகத்துக்கு அதிகபடியாக 11,000 டன் இரசாயன உரவகைகளை ஒதுக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

"தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறை—27 வகை நெல் சாகுபடிக்குத் தேவையான உர வகைகள் முழுவதையும் மத்திய அரசு தர முன்வந்துள்ளது"

என்று, வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, விவசாய கருத்தரங்கில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

தஞ்சை மாவட்டத்தில் ஒரு போக நிலங்களை இரு போகத்துக்கு மாற்றும்போது அதிகப்படியாக உர வகைகள் தேவைப்படுமாதலால், அந்த அதிகப்படி உரத்தை வழங்கும் பொறுப்பை மத்திய அரசே ஏற்றுக்கொள்ளும் என்று மத்திய உணவு வேளாண்மைத் துறை அமைச்சர் செகசீவன்ராம். உறுதியளித்திருக்கிறார்.

ஆடுதுறை—27 வகை நெல் சாகுபடி அதிகரிப்பதால், கண்டு முதல் 13,000 டன் அளவை எட்டுமென்று எதிர்பார்க்கிறோம்.

சென்ற ஆண்டில் இதே நிலத்தில் 4,000 டன்தான் கிடைத்தது. மற்ற அதிக விளைச்சல் தானியச் சாகுபடி மூலமும், கண்டு முதல் மும்மடங்கு பெருகும். முன்பு 1,000 டன் விளைந்த இடத்தில், 3,500 டன் கிடைக்கும்"

## பெரியாற்றுப் பாசனம் ஒத்திவைப்பு

சென்னை, ஆக, 21—

பெரியாறு ஏரியில் நீர் மட்டம் குறைவாக இருப்பதால், ஒரு போக நிலங்களுக்கும், இரு போக நிலங்களில் இரண்டாவது போகத்திற்கும் பாசன நீர் விடுவது ஆக. 15-ம் நாளுக்குப் பிறகு—ஏரியில் நீர் இருப்புப் போதுமான அளவில் அதிகரிக்கும்வரை—ஒத்திவைக்கப்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் மதுரை, மேலூர், நிலக்கோட்டை, பெரியகுளம் வட்டங்களில் பெரியாறு பகுதியிலுள்ள ஆயக்கட்டுக்காரர்களுக்கு இந்தச் செய்தி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

# துங்காவியில் கே. ஏ. மதியழகன், சாதிக்பாட்சா

### ஊராட்சி மன்ற வரவேற்பும் படத் திறப்பும்

14—8—67 அன்று, துங்காவி ஊராட்சி மன்றத்தின் சார்பில், தமிழக முதலமைச்சர் அண்ணா—பெரியார் ஈ.வெ.ரா. ஆகியோரின் உருவப் படத் திறப்பு விழாவும், உணவமைச்சர் கே. ஏ. மதியழகன், நலத்துறை அமைச்சர் சாதிக்பாட்சா ஆகியோருக்கு வரவேற்பும் நடைபெற்றது.

வரவேற்பு இதழை, ஊராட்சி மன்றத் தலைவர் திருமலைச்சாமி வாசித்தளித்தார்.

ஊராட்சி ஒன்றிப்பு உயர் துவக்கப் பள்ளியின் சார்பில் வரவேற்பினை, திரு. இராமசாமி வாசித்தளித்தார்.

விழாவிற்கு, திரு. அழகுமுத்து சுப்பராயன் தலைமைவகித்தார்.

பெரியார் அவர்களின் உருவப் படத்தை அமைச்சர் கே. ஏ. மதியழகனும், பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவப் படத்தை நலத்துறை அமைச்சர் சாதிக் பாட்சாவும் திறந்துவைத்தனர்.

இரு அமைச்சர்களும் படத்தைத் திறந்துவைத்து, வரவேற்புக்கு நன்றி தெரிவித்துச் சொற்பொழிவாற்றினர்.

விழாவில், சென்னைத் தீ விபத்து நிதிக்கு ஊராட்சி மன்றச் சார்பில் ரூ. 101-ம், துங்காவி தி.மு.க. சார்பில் ரூ. 51-ம், பெற்றோர்கள் சங்கச் சார்பில் ரூ. 15-ம், நெடுஞ்சாலைத் தொழிலாளர் சார்பில் ரூ. 5-ம் நன்கொடையாக அமைச்சர்களிடம் அளிக்கப்பட்டது.

# சென்னையில் திரு.வி.க. உருவச் சிலை

"சென்னை — இராயப்பேட்டை, 60-வது கோட்டம் சீனிவாச பெருமாள் சன்னதித் தெருவில், திரு. வி. க. பூங்காவில், தமிழ்த் தென்றல் திரு. வி. கல்யாணசுந்தரனார் அவர்களின் மார்பளவு உருவச் சிலையை, ஆக. 26-ம் நாள் மாலை 6-30 மணியளவில், சென்னை மேயர் திரு. இரா. சம்பந்தம் தலைமையில்—தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் முன்னிலையில்—தமிழகக் கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. அவர்கள் திறந்துவைக்கிறார்; பொதுமக்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்" என்று, வட்ட மாநகராட்சி உறுப்பினர் கோ. இளவரசு அறிவிக்கிறார்.

# இந்திச் 'சகுனி'களின் ஆபத்தான யோசனை

## அரசு செவிசாய்த்தால் நாடு உருப்படாது

### 'பித்துக்குளித்தனங்களில் ஈடுபட வேண்டாம்' என இடித்துரை

"இந்தி பேசும் மாநிலங்கள், தரம்—கல்வியறிவு—விளைச்சல்—தொழில் வளர்ச்சி—ஒழுங்குமுறை ஆகிய எல்லாத் துறைகளிலுமே பின்தங்கியிருப்பவை; இவை எல்லா வகைகளிலும் இணக்கமாக ஏற்றம் காண்பதற்குச் சாத்தியமான எல்லா உதவிகளையும் அளித்து, மக்களை முன்னுக்குக் கொண்டுவருவதுதான் நியாயம். அவை இன்று இருந்துவரும் தாழ்நிலைகளுக்கு மற்ற ராஜ்யங்களை மட்டந்தட்டி, உதவாக்கறையாக்கிவிடக்கூடிய பித்துக்குளித்தனங்களில் யார் ஈடுபட்டாலும், அது அறிவுடைமையாகாது!'

இவ்வாறு, 'தினமணி' (சென்னை 19—8—67) இதழில் 'விளையாடாதீர்!' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள தலையங்கத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது; மேலும் அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

"ஆட்சிமொழி, போதனா மொழி இரண்டிலும் எந்த முடிவைச் செய்வதாயினும் அதற்குமுன் இப்போதைய நிலைமை என்ன—மாறுதலின் தன்மையென்ன—நோக்கமென்ன—அவற்றின் விளைவுகள் எவ்வாறு இருக்கும்—எந்த மாறுதலுக்கும் அகில-இந்திய உடன்பாடு கிடைக்கச் செய்வதன் அவசியம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு ஆராய வேண்டும்.

ராஜீய நிர்ப்பந்தங்களுக்குத் தலைகுனிந்து அவசரமாக மாறுதல்களைச் செய்தால், உயர்கல்வி—ஆட்சித்துறை — அறிவியல் துறை—தேச வளர்ச்சி ஆகிய அனைத்திலும் தேசம் வெகு வேகமாகப் பின்னடைந்துவிடும்! 'இந்நாட்டில், ஒற்றுமை—ஒருமைப்பாடு—பிரதேச ஐக்கியம்—நல்லாட்சி ஆகியவை நீடித்திருக்க முடியாது' என்ற நிலைமை ஏற்பட்டு விடும்.

இவைகளைப் பற்றி இந்தி பேசுவோரின் பிரதிநிதிகளுக்கு விளக்கமாகக் கூறியாக வேண்டிய பொறுப்பு பிரதம மந்திரிக்கு உண்டு. சிந்தனைக் குழப்பத்தில் ஆழ்ந்து தவிப்பதாகத் தோன்றும் யூனியன் கல்வி மந்திரியை மாற்றி விடுவது அவசியமாயின், அதைச் செய்வதற்குத் தயங்கலாகாது!

பார்லிமெண்ட் மெம்பர்கள் 32 பேர் கையெழுத்திட்டு பிரதமரிடம் மகஜர் கொடுத்து, மொழிப் பிரச்சினையில் நியாயம் தவறாமலிருப்பதன் அவசியத்தை வலியுறுத்தி இருப்பது போற்றுதற்குரியது. அவர்கள் கோருவதும், சாதாரணமாக பிற சிந்தனையாளர் வற்புறுத்துவதும் இதுதான்:—

1. பிராந்திய மொழியையோ இந்தியையோ உயர் படிப்பில் போதனா மொழியாக்க விரும்பினால், அதற்கான வசதி வாய்ப்பை அளிக்கட்டும்; ஆனால், இவற்றிலோ அல்லது ஆங்கிலத்திலோ பாட போதனை பெறுவது மாணவர்களின் இஷ்டத்துக்குரிய விஷயமாக இருக்கவேண்டும். இதில் எந்தவிதமான நிர்ப்பந்தமும் இருக்கலாகாது.

2. அகில-இந்திய ஆட்சிமொழித் துறையில் இப்பொழுது ஆங்கிலத்துக்கு இருந்து வரும் வசதி வாய்ப்புகள் சிறிதும் குறையலாகாது.

3. ஆங்கிலம், காலேஜில் போதனா மொழியாகவும், அகில-இந்திய ஆட்சி மொழியாகவும் இல்லாதபடி செய்துவிட்டால்—இந்தி ஒன்றுக்குத்தான் இந்த இரண்டு அந்தஸ்துக்களும் வந்துவிடும் என்று நினைத்து சில சகுனிகள் தருகின்ற யோசனைக்குச் செவிசாய்த்தால்—இந்நாடு ஒருறுப்பாக நீடித்து வளர்ந்தோங்குவது சிரமமாகிவிடும். எனவே, ஆங்கிலத்தை விரட்டுவது அதன் உபயோகத்துக்கு கால வரம்பு கட்டுவது என்ற எண்ணங்களையெல்லாம் அடியோடு விட்டுவிட வேண்டும்."

# என் ஆசை இன்னும் நிறைவேறவில்லை!

நெல்லை, ஆக. 21—

“‘திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாகவும், அண்ணா முதலமைச்சராகவும் ஆகவேண்டும்’ என்றெல்லாம் நீங்கள் விரும்பினீர்கள் ; உங்கள் ஆசை நிறைவேறிவிட்டது —எனவே, நிமிர்ந்து நடக்கிறீர்கள் !

“ஆனால் என் ஆசை நிறைவேறவில்லை—நாட்டில் என்று ஏழ்மை ஒழிகிறதோ அன்றுதான், எனக்கு முழு மன நிறைவு ஏற்படும்! ‘எல்லோருக்கும் உணவு — உடை நிம்மதியாகக் கிடைக்கிறது’ எனும் நிலை என்று ஏற்படுகிறதோ அன்றுதான் என் ஆவல் நிறைவேறும் !

“இந்த அரசு நம் அரசு மட்டுமல்லாமல், நல்லெண்ணம் கொண்டவர்களின் அரசமாகும் ; ஆகவே, மக்கள், தொடர்ந்து ஆதரவு தரவேண்டும். ‘அண்ணா தொட்டதெல்லாம் பொன்னாகும்’ என்று இருந்துவிடக் கூடாது ! ஏழைகளின் கண்ணீரைப் போக்க நாம் அரும்பாடு படவேண்டும் !”

---அறிஞர் அண்ணா

(புளியங்குடி பொதுக்கூட்டத்தில்)

# இருபதாண்டு உருண்டோடி விட்டது...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உழுது கொண்டிருக்கிறானே, உழவன் அவனும் ;

பல தொழில்களிலே ஈடுபட்டுப் பொருளை உற்பத்தி செய்கிறானே, பாட்டாளி—அவனும் ;

சிறார்க்கும் சிறுமியர்க்கும் அறிவுக் கண்களைத் திறந்து வைத்திடும் ஆசிரியர்கள் உள்ளனரே—அவர்களும் ;

நலிவு நீக்கிடத் தொண்டாற்றுகின்றனரே, மருத்துவத் துறையினர்—அவர்களும் ;

காட்டு வெள்ளத்தை அடக்கி நீர்வளம் கொண்டு நில வளம் பெருக்கி, ஊர் அமைத்துச் சீர் அமைத்துத் தருகின்றனரே, பொறியியல் துறையினர்—அவர்களும் ;

நாட்டு நிர்வாகத்திற்கான பல்வேறு துறைகளிலே பணியாற்றுகின்றனரே, அலுவலர்—அவர்களும் ;

இவர்கள் அனைவோரின் திறமையிலும் செயலார்வத்திலும், வெற்றியிலும்தான் இருக்கிறது சுதந்தரத்தின் சோபிதம் — விடுதலையின் விளைவு! அவர்கள், சுதந்தரத்தின் காவலர்கள் —அவர்களுக்கு என் வணக்கம்.

தனித்தனியே நமக்கு உள்ள விருப்பு, வெறுப்பு— உரிமை—சலுகை—எனும் எல்லாம், ‘நாடு வாழ வேண்டும்’ என்ற பொதுக் கடமைக்குத் துணை செய்வதாக அமைய வேண்டும்; நமது முறைகள் அவ்விதம் இருந்திடவேண்டும்.

‘நாடு வாழ, நம்முடைய உழைப்பும் தேவை’ என்ற உணர்வு எல்லோருக்கும் எழ வேண்டும்.

‘இவனால் என்ன ஆகும்? இவனே இதற்கு ஏற்றவன்? இவனுக்கு ஏது அந்த ஆற்றல்?’ என்று, மறந்தும் எவரைப் பற்றியும் எண்ணிடலாகாது! அந்த எண்ணம், நாட்டு வாழ்வுக்கே ஊறு செய்திடும்!

நாம் எல்லோரும் இந்நாட்டு மக்கள்! நாம் எல்லோரும் நாட்டின் உடைமை!

‘நாடு’ என்பது, வெறும் பூகோளப் படம் அல்ல —அங்கு வாழும் மக்களின் உணர்ச்சித் தொகுப்பு!

நாம் யாவரும் நமது அறிவாற்றலை நாட்டுக்காக எந்த அளவுக்குத் தருகின்றோமோ, அந்த அளவுக்கே நாட்டுப் பொது நன்மை உயர முடியும்!

‘விடுதலை பெற்றதால் நாடு நல்வாழ்வு பெற்றிருக்கிறது என்று அவனி பாராட்டும் நிலையைக் காண நாம் என்ன செய்திட வேண்டும்? நாம் தந்திடும் காணிக்கை யாது?’ என்பது பற்றி, ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டிய நாள்!

களிப்படைய மட்டுமல்ல நண்பர்களே—இது, கணக்குப் பார்க்கும் நாளுமாகும் ;

‘நாம் சுதந்தரம் பெற்ற பிறகு நாடு வாழ்ந்திட நாம் தந்தது என்ன — இனி என்ன தர வேண்டும்—எவ்வளவு தரவேண்டும்’ என்ற கணக்குப பார்த்திடும் நாள்!

முதல் ஆகஸ்டு பதினைந்து—கணக்கு தீர்த்த நாள்! ஏகாதிபத்தியத்துக்கும் - நமக்கும் இருந்துவந்த கணக்கைத் தீர்த்த நாள்! புதுக் கணக்குப் போட்ட நாள்!

இருபதாண்டுகளுக்குப் பிறகு — இன்றைய ஆகஸ்டு பதினைந்து—கணக்குப் பார்க்கும் நாள்!

‘சுதந்தரம் பெற்ற பிறகு, நமது சொல்லும் செயலும் எந்த முறையில்—எந்த அளவு நமக்குச் சுகவாழ்வு பெற்றளித்தது’ என்ற கணக்குப் பார்க்கும் நாள்!

இந்நாளில், உங்களோடு சேர்ந்து மகிழ்ச்சியும் எழுச்சியும் பெறுகின்றேன்! ‘நமது அறிவாற்றலின் துணையுடன் பெற்ற சுதந்தரம் பேணிக் காப்பாற்றப்படும்’ என்று உறுதி பெறுகின்றேன்!

‘சுதந்தரத்தின் பலனை நல்ல அளவுக்கு நாட்டவர் அனைவரும் பெற்றிட உழைத்திட வாரீர்’ என்று அழைக்கின்றேன்! உமது ஒப்பற்ற ஆற்றலின் துணைகொண்டு நாடு எத்தகைய ஏற்றம் பெறப்போகிறது என்பது பற்றி எண்ணுகின்றேன் —ஒரு புன்னகைப் பூந்தோட்டத்தை என் எதிரே காணுகின்றேன்! எழில்மிக்கதோர் எதிர்காலம் காணுகின்றேன்! அந்த பொற்காலம் கண்டிட வழி அமைத்திடும் நன்னாளே இத்திருநாள்! வாழிய நீவிர்! வாழிய நம் நாடு!”

---முதலமைச்சர் அண்ணா

(சுதந்திர நாளன்று வானொலியில் ஆற்றிய உரை)

# சிவசேனைக்கு
## பம்பாய்த் தொழிலதிபரின் பணம்!
### மது லிமாயி வெளியிடும் தகவல்

பம்பாய், ஆக. 21—

‘சிவசேனை’யின் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக ஒரு பெரிய தொழிலதிபர் பண உதவியளித்து வருவதாக, நாடாளுமன்ற உறுப்பினர் மது லிமாயி இங்கு தெரிவித்தார்.

அந்தத் தொழிலதிபரின் பெயரைப் பிறகு நாடாளுமன்றத்தில் தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

சிவசேனையின் நடவடிக்கைகளைப் பற்றி அவர் குறிப்பிடுகையில், ‘வட்டார உணர்ச்சி அடிப்படையில் சிவசேனை இயங்குகிறது’ எனக் கூறினார்.

“கடந்த 200 ஆண்டுகளுக்கு மேலாக தஞ்சாவூர், இந்தூர், காசி ஆகிய இடங்களில் பல மகாராட்டிரக் குடும்பங்கள் வசிக்கின்றன ; அவர்களுக்கு எதிராக அந்த இடங்களிலெல்லாம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டால் நிலைமை என்ன ஆகும் என்று சிவசேனையினர் யோசித்துப் பார்க்கவேண்டும்’ என்றார்— மது லிமாயி.

எனக் கோரி, நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. கே. கோபாலன், ஒரு விண்ணப்பம் அனுப்பியுள்ளார்.

அந்த மனுவில், ஆகஸ்டு 15-ல் பம்பாயில் பல இடங்களில் பெரும் அளவில் மோதல் ஏற்பட்டிருப்பதையும், பல கடைகள் சூறையாடப்பட்டிருப்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்.

## ‘தக்க நடவடிக்கைகள் எடுப்பரென நம்புகிறேன்’
### அறிஞர் அண்ணா நம்பிக்கை

திருச்சி, ஆக. 21—

“மகாராட்டிர அரசும் அங்குள்ள மற்ற அரசியல் தலைவர்களும் அத்தகைய இயக்கத்தின் அபாயங்களை உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறேன் ; அவர்கள் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்களெனவும் நம்புகிறேன்”

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், செய்தியாளர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

## சிவசேனையின் வெறிச் செயல்கள்
### குடியரசு தலைவரிடம் முறையீடு

‘பம்பாயில் சிவசேனையின் வெறித் தாக்குதல்களிலிருந்து மகாராட்டிரர் அல்லாதவர்களுக்குப் பாதுகாப்பளிக்கக் குடியரசுத் தலைவர் தலையிட்டு ஆவன செய்யவேண்டும்”

## திட்டக் குழு
### மாநில அரசே நிறுவும்

புதுடில்லி, ஆக. 20—

மாநிலங்களே விரைவில் திட்டக் குழுக்களை நிறுவக்கூடுமெனத் தெரிகிறது.

திட்டமிடுவது அந்தந்த மாநிலத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டுமென்றும், மாலங்கள் தெரிவிக்கும் திட்டங்களைப் பற்றி மத்திய அரசு ஆய்வு செய்ய வேண்டுமென்றும் பல மாநிலங்கள் முன்பே தெரிவித்துள்ளன.

எடுத்துக்காட்டாக, தமிழ்நாடு, சில முக்கியத் திட்டங்களை கொண்டுள்ளது. சேலம் உருக்காலை—தூத்துக்குடித் துறைமுகத் திட்டங்களுக்கு, இது, முதன்மை அளிக்கிறது.

ஆனால், திட்டக் குழு இவைகளைப் பற்றி ஆய்வு செய்ததாகத் தெரியவில்லை.

## மருந்துத் திருட்டைத்
### தடுக்க அரசு நடவடிக்கை

மீரத், ஆக. 21—

அரசாங்க மருத்துவ மனைகளில் இருக்கிற மருந்துகள் இரகசியமான முறையில் கள்ளச்சந்தையில் விற்கப்படுவதையும், சட்ட விரோதமாக நோயாளிகளிடமிருந்து கட்டணம் வசூலிப்பதையும் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

மருந்துப் புட்டிகளின் மீது, ‘அரசுச் சொத்து—விற்பனைக்கு அல்ல’ என்ற முத்திரை இனிக் குத்தப்படும்.

அரசு மருந்துகள் கள்ள மார்க்கெட்டில் விற்பனையாவதை இதன் மூலம் தடுக்க முடியும் என்று அரசு கருதுகிறது.

# மொழிப் பிரச்சினையில் இந்திரா காந்தியை நம்புவோம்
## நமக்காக வாதாட அவரது கரத்தை வலுப்படுத்துவோம்
### கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தைக் கைவிட மாணவர்கட்கு அறிஞர் அண்ணா அறிவுரை

சென்னை, ஆக. 21—

“மொழிச் சிக்கலில் இந்தி பேசாத மக்களுக்காக அமைச்சரவையில் நல்ல முறையில் வாதாடக்கூடியவர் ஆவார்—தலைமையமைச்சர் இந்திரா காந்தி ; எனவே அவரது கரங்களை வலுப்படுத்த வேண்டியது நமது கடமையாகும்” என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இங்கு தெரிவித்தார்கள்.

தலைமையமைச்சர் இந்திரா காந்தி மதுரை வரும்போது கறுப்புக்கொடி காட்டப்போவதாக அறிவிக்கப்பட்டிருப்பது குறித்து செய்தியாளர்கள் அண்ணா அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்; அதுபோது, அண்ணா அவர்கள், ‘தலைமையமைச்சர் வருகையின்போது எவ்வித ஆர்ப்பாட்டமும் வேண்டாம்’ என்று மாணவர்களுக்கு அறிவுரை கூறினார்.

“தி.மு.க. ஆட்சிமீது மாணவச் சமுதாயம் முழு நம்பிக்கை வைக்க வேண்டும். தமிழைக் காக்கவும், தமிழ் வளர்ச்சிக்கும் இந்த அரசு தொடர்ந்து செய்ய வேண்டியதை எல்லாம் செய்துவரும்”

என்றும் குறிப்பிட்டார் அண்ணா.

## திருச்சி மாவட்டத்தில் சீரணி
### அடுத்த திங்கள் துவங்கும்

திருச்சி, ஆக. 21—

திருச்சி மாவட்டத்தில் அடுத்த திங்கள் சீரணி செயல்படத் தொடங்கும்; இதை அறிஞர் அண்ணா துவக்கிவைப்பார்.

இது தொடர்பாக தனி அதிகாரி எம். பரமசாமியும் மாவட்ட ஆளுநரும் கலந்து பேசினர்.

திருச்சி மாவட்டச் சீரணி ஆயிரம் பேர் கொண்டதாக இருக்கும்.

மாவட்டத்திலுள்ள 39 ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து, ஒன்றியத்திற்கு 30 பேர் வீதம் சீரணியில் சேர்க்கப்படுவார்கள்.

## இந்திராவுக்குக் கறுப்புக் கொடி இல்லை
### கருணாநிதி வேண்டுகோளுக்கு இணங்க மாணவர்கள் முடிவு

சென்னை, ஆக. 21—

தமிழ்நாட்டுக்கு வரவிருக்கும் தலைமை அமைச்சர் இந்திரா காந்திக்குக் கறுப்புக் கொடி காட்டுவதென மாணவர்கள் செய்திருந்த முடிவை, பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதி, மாணவர்களின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசியதன் பயனாகக் கைவிட்டனர்.

## நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

### 23--8--67

**கட்டிமேடு**

முஸ்லிம் லீக் சார்பில் இரவு 7 மணிக்கு பந்தாட்ட மைதானத்தில்; தலைவர்: மீ.சே.மு. இப்ராகிம்; பேசுவோர்: எம்.எம். பீர்முகமது எம்.எல்.ஏ., ந. தருமலிங்கம் எம்.எல்.ஏ., வை. சுப்பிரமணியம், செ. யூசுப்.

### 24--8--67

**தோப்புத்துறை**

தி.மு.க.—முஸ்லிம் லீக் சார்பில் மாலை 6-30 மணிக்கு கடைத் தெரு அருகாமையில்; பேசுவோர்: எம்.எம். பீர்முகமது எம்.எல்.ஏ., ந. தருமலிங்கம் எம்.எல்.ஏ., செ. யூசுப், கருணை கமால், வே. கோதண்டபாணி, செ. மொய்தீன் பிச்சை.

**கொண்டயம்பட்டி**

எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் பாராட்டு விழா; மாலை 6 மணிக்கு பெருமாள் திடலில்; தலைவர்: சு. பாலுச்சாமி; பாராட்டப்படுவோர்: சட்டமன்ற உறுப்பினர்கள் பி.எஸ். மணியம், ஆ. முனியாண்டி, சொ. கோவிந்தராசன்; பாராட்டுவோர்: சி. தமிழரசி பி.ஏ., பொன் முத்துராமலிங்கம் பி.ஏ., பி.எல்., அ. இராமலிங்கம், கூ. குருசாமி, சோ. வெள்ளைச்சாமி. ச. கருணாநிதி, மற்றும் பலர்.

**மண்டலமாணிக்கம்**

எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு தண்ணீர் பந்தல் எதிரில்—கே.வி.கே. சாமி அரங்கில்; தலைவர்: மே. முத்து; பேசுவோர்: மாங்குடி மதியழகன், அப்தாரி, முத்துராமலிங்கம், இரா. கிருட்டினன், மு. வீரத்தியாகி, மற்றும் பலர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை,13.) அச்சிட்டு வெளியிடப்பரிறது.